# மெட்ரோ ரெயிலில் பார்வையற்ற மாணவர்கள்



சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் சர்வதேச மனித மாண்புகளுக்கான அமைப்பு இணைந்து பார்வையற்ற மாணவர்களுக்கான ஆனந்த பயணத்தை ஏற்பாடு செய்தது. அதன்படி 'நித்ரோதயா' பள்ளி பார்வையற்ற மாணவ-மாணவிகள் 40 பேர் திருமங்கலம் நிலையத்தில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரெயிலில் அழைத்து செல்லப்பட்டனர். அவர்களுடன் 5 ஆசிரியர்கள், 35 தன்னார்வலர்களும் பங்கேற்றனர். இந்த பயணத்தை ஆனந்தமாக அனுபவித்ததாக பார்வையற்ற மாணவ-மாணவிகள் குறிப்பிட்டனர்.